**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 51/2020 |
| Name | : Nehru Gandhi |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **10.07.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கடந்த 01.09.2016ம் வருடம் கொமரலிங்கம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது அன்று மாலை எனக்கு கிடைத்த காவல் நிலைய எழுத்தர் அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் பழநி – உடுமலை வரும் சக்தி என்னும் தனியார் பேருந்தில் கருப்பு கலர் ஜீன்ஸ் பேண்டும், பச்சை நிற சட்டை அணிந்த ஒரு நபர் கஞ்சா என்னும் போதைப் பொருள் கொண்டு வருவதாக கிடைத்த தகவலின் பேரில் அந்த பேருந்தை நிறுத்தி நானும், என்னுடன் முதல் நிலை காவலர் ராமச்சந்திரன் என்பவரும் ஜக்கம்பாளையம் பிரிவில் மாலை சுமார் 05.40 மணிக்கு உரல்பட்டி பஸ் நிலையம் வந்து மேற்படி பேருந்தை அதன் ஓட்டுநரிடம், நடத்துநரிடம் விவரத்தை சொல்லி பேருந்தை நிறுத்தச் சொல்லி சோதனை செய்த தகவலாளி கொடுத்த தகவலின் பேரில் மேற்படி உடை அணிந்த நபரை பேருந்தில் இருந்த கீழே இறக்கி அவர் கொண்டு வந்த பேக்கை நான் சோதனை செய்யவா அல்லது எனது உயர் அதிகாரி சோதனை செய்யவா அல்லது நீதித்துறை நடுவர் அவரிடம் சோதனை செய்யவா என்று அவரிடம் கேட்ட போது அவர்

என்னையே சோதனை செய்யச் சொன்னதால் விருப்ப கடிதம் பெற்று பேக்கை சோதனை செய்த போது பேக்கில் 2 பொட்டலம் கஞ்சா வைத்திருந்தார். **01.09.2017 தேதியிட்ட விருப்ப கடிதம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பாப்பம்பட்டியில் இருந்து தெரியாத நபரிடம் வாங்கி வந்ததாக சொன்னார். அருகில் உள்ள கடையில் எடை போட்டு பார்த்ததில் 750 கிராம் எடை இருந்தது. சுரேஷ்குமார் மற்றும் கவிபிரகாஷ் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் காலை 06.00 மணிக்கு தனியறிக்கை மூலம் சிறப்பு உதவி ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். **01.09.2017 தேதியிட்ட ரகசிய தகவல் அறிக்கை அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆஜர் எதிரி தான் அன்று கஞ்சா போதை பொருளை கெண்டு வந்து என்னால் கைது செய்யப்பட்டார். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) ரகசிய தகவல் எத்தனை மணிக்கு கிடைத்தது என்றால் மாலை 05.20 மணிக்கு கிடைத்தது. அந்த சமயத்தில் நான் ஜக்கம்பாளையத்தில் இருந்தேன். அங்கிருந்து உரல்பட்டிக்கு சுமார் 3 கி.மீ இருக்கும். ரகசிய தகவல் கிடைத்ததை பொது நாட்குறிப்பில் பதிவு செய்தேனா என்றால் அதை நிலைய எழுத்தர் பதிவு செய்திருப்பார். பழநி – உடுமலை மெயின் ரோட்டில் பொருள் கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான். எதிரி வந்த வாகனத்தை யார் நிறுத்தினார் என்றால் நான் தான் நிறுத்தினேன். எதிரி சரஸ்வதி என்ற தனியார் பேருந்தில் வந்தார். பேருந்தை நிறுத்தும் போது சுமார் 05.30 மணி இருக்கும். பேருந்தை நிறுத்திய இடத்திற்கு நான் 05.25 மணிக்கு வந்தேன். என்னுடன் ராமச்சந்திரன் இருந்தார். அவருக்கு யார் தகவல் கொடுத்தது என்றால் நானும், அவரும் இருந்த போது தான் தகவல் கிடைத்தது. இருவரும் ஒன்றாகத்தான் சம்பவ இடத்திற்கு வந்தோம். சொந்த இருசக்கர வாகனத்தில் வந்தோம்.

(2) எதிரி சோதனை செய்ய கொடுத்த கடிதம் எங்கு வைத்து எழுதினேன் என்றால் சம்பவ இடத்தில் வைத்து எழுதினேன். என்னால் எழுதப்பட்டது. எத்தனை மணிக்கு எழுதப்பட்டது என்றால் சுமார் 05.35 மணிக்கு எழுதப்பட்டது. அந்த சமயத்தில் நானும்,

என்னுடன் முதுநிலை காவலர் ராமச்சந்திரன் இருந்தார். அருகில் வேறு யார் இருந்தார்கள் என்றால் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் சிவப்பிரகாசம் மற்றொருவர் இருந்தார். (சாட்சி தனக்கு தற்போது ஞாபகமறதி ஆகிவிட்டதாக சொன்னார்).

(3) பேருந்தை உரல்பட்டி பேருந்து நிறுத்தத்தில் நிறுத்தினேன். அருகில் வீடுகள் மற்றும் நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான். பொதுமக்கள் நடமாடக்கூடிய இடம் என்றால் சரிதான். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருளை அருகில் உள்ள அண்ணாச்சி கடையில் வைத்து எடை போட்டேன். எடை போட்ட இயந்திரம் கல் இயந்திரமா அல்லது மின்னணு இயந்திரமா என்றால் மின்னணு இயந்திரம். இயந்திரம் சரியாக வேலை செய்கிறது என்பதை எப்படி தெரிந்து கொண்டேன் என்றால் அப்போதே zero செய்து தெரிந்து கொண்டேன். அந்த கடைக்காரரை வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை. கைப்பற்றப்பட்ட பொருளை எத்தனை முறை எடை பார்த்தேன் என்றால் 2 பொட்டலங்களை தனித்தனியாக எடை பார்த்தேன். 1 பொட்டலத்தின் எடை எவ்வளவு என்றால் 375 கிராம். 2 பொட்டலத்தையும் எத்தனை முறை எடை பார்த்தேன் என்றால் ஒரே முறை பார்த்தேன். கைப்பற்றப்பட்ட பொருளை எந்த பையில் வைத்திருந்தார் என்றால் பச்சை நிற ஷோல்டர் பையில் வைத்திருந்தார். பைக்குள் என்ன கலர் கவரில் வைத்திருந்தார் என்றால் காக்கி நிற கவரில் வைத்திருந்தார்.

(4) தனியார் பேருந்தின் நடத்துநரிடம் எதிரி டிக்கெட் எடுத்தாரா என்று விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். பயணச் சீட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தனியார் பேருந்து நடத்துநர், ஓட்டுநர், பயணிகள் யாரையும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் உள்ளூர்க்காரர் என்பதை எப்போது கேட்டு தெரிந்து கொண்டேன் என்றால் கைப்பற்றப்பட்ட சமயத்தில் கேட்டேன். விருப்ப கடிதத்தில் எதிரியை தவிர வேறு யார் கையெழுத்து போட்டார்கள் என்றால் சாட்சிகள் கையெழுத்து போட்டார்கள். எதிரி சாட்சிகள் முன்னிலையில் தான் கையெழுத்து போட்டாரா என்றால் ஆமாம். என்னையும், காவலரையும் தவிர வேறு போலீசார் யாரும் இல்லை.

(5) கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருளை நான் பேக்கில் இருந்து எடுத்தேனா அல்லது எதிரி எடுத்து கொடுத்தாரா என்றால் எதிரி எடுத்து கொடுத்தார். நான்

பார்க்கும் போது பேருந்தில் அந்த பை எதிரியின் கையில் இருந்தது. எவ்வளவு மாதிரிக்கு அனுப்பினேன் என்றால் விசாரணை அதிகாரி தான் அனுப்பினார். மாதிரி எடுத்த சமயத்தில் நான் இல்லை. சம்பவ இடத்தில் இருந்து காவல் நிலையம் சுமார் 8–9 கி.மீ தூரம் இருக்கும். கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யும் போது நேரம் 05.40 மணி இருக்கும். பேருந்தை நிறுத்தி, எதிரியை சோதனை செய்து கைப்பற்றப்பட்ட பொருளை எடை பார்ப்பதற்கு மொத்தமாக எனக்கு சமார் 20–25 நிமிடங்கள் ஆகியிருக்கும்.

(6) கைப்பற்றுதல் மகஜர் எத்தனை மணிக்கு தயார் செய்யப்பட்டது என்றால் 05.40 மணிக்கு தயார் செய்யப்பட்டது. கைப்பற்றுதல் மகஜரை தட்டச்சு செய்யப்பட்ட படிவத்தை எடுத்துச் சென்றேனா என்றால் ஆமாம். சம்பவ இடத்தில் இருந்து காவல் நிலையம் செல்ல சுமார் 20 நிமிடங்கள் ஆகும். நான் சொல்வது போல் உடுமலை – பழநி ரோட்டில் சரஸ்வதி என்ற பேருந்தே இல்லை என்றும் புள்ளி விவர கணக்கிற்காக எதிரிக்கு எதிராக பொய்யாக இந்த வழக்கை பதிவு செய்துள்ளேன் என்றும், கைப்பற்றபட்டதாக சொல்லப்படும் பொருள் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்படவில்லை என்றும் காவல் நிலையத்தில் இருந்தது என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் எதிரி நான் சொன்னது போல் பொருள் எடுத்து வந்திருந்தால் எந்த பையில் கொண்டு வந்தார் என்று சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. உண்மையில் கடையில் வைத்து வழக்குச் சொத்தை அளவீடு செய்திருந்தால் கடை உரிமையாளரையும், எடை இயந்திரத்தை பற்றி சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. பேருந்தின் பயணிகளையும், பொது மக்களையும் சாட்சியாக சேர்த்திருப்பேன் என்றும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.10 18:02:35 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 51/2020 |
| Name | : Manikandan |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **10.07.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது பழநி அடிவாரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிகிறேன். கடந்த **01.09.2017** ம் தேதி கொமரலிங்கம் காவல் நிலையத்தில் நிலைய எழுத்தராக பணிபுரிந்த போது சுமார் மாலை **05.00** மணி அளவில் போன் மூலமாக காவல் நிலையத்திற்கு பழநி – உடுமலை தனியார் பேருந்தில் பாப்பம்பட்டி பகுதியில் கஞ்சா வாங்கிக்கொண்டு வருவதாக தகவல் கிடைத்தது. அதனை நான் மடத்துக்குளம் வட்ட காவல் ஆய்வாளர் அவர்களுக்கு தகவல் தெரிவித்து அவர்களின் உத்திரவின் பேரில் அவர்கள் ஜக்கம்பாளையம் பகுதியில் ரோந்து அலுவலில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் நேருகாந்தி மற்றும் முதல் நிலை காவலர் ராமச்சந்திரன் ஆகியோருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. மாலை சுமார் **06.00** மணி அளவில் அவர்கள் ஆஜர் எதிரி கார்த்திகேயன் மற்றும் கைப்பற்றப்பட்ட கஞ்சாவுடன் உடன் நிலையம் வந்தார்கள். சிறப்பு உதவி ஆய்வாளரிடம் தகவல் அறிக்கை மற்றும் கைப்பற்றப்பட்ட கஞ்சாவை

கொடுத்தார்கள். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) 01.09.2017 ம் தேதி அன்று என்னுயைட பணி நேரம் என்ன என்றால் நிலைய எழுத்தர் என்பதால் காலை 09.00 மணிக்கு வந்து இரவு வரை இருப்பேன். ரகசிய தகவல் கிடைத்ததை பற்றி பொது நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளேன். நான் தான் பதிவு செய்தேன். பொது நாட்குறிப்பில் பதிவு செய்த எண் என்ன என்றால் ஞாபகம் இல்லை. கைப்பற்றப்பட்ட பொருள் எத்தனை கவரில் கொண்டு வந்தார்கள் என்றால் இரண்டு கவர்களில் கொண்டு வந்தார்கள். அதன் வண்ணம் என்ன என்றால் கறுப்பு. கைப்பற்றப்பட்ட பொருள் எவ்வளவு எடை என்று காவல் நிலையத்தில் வைத்து பார்க்கப்பட்டதா என்றால் இல்லை. எடை பார்க்கும் இயந்திரம் கொண்டு வந்தார்களா என்றால் இல்லை.

(2) நேரு காந்தி, காவலர் மற்றும் எதிரி மூன்று பேர் வந்தார்கள் என்றால் சரிதான். மூவரும் எந்த வாகனத்தில் வந்தார்கள் என்றால் இரண்டு இருசக்கர வாகனத்தில் எதிரியை நேரு காந்தி அவரது இருசக்கர வாகனத்தில் அழைத்து வந்தார். மொத்தம் எத்னை பேக் இருந்தது என்றால் ஒரு பேக் இருந்தது. பேக் திறந்த நிலையில் இருந்ததா அல்லது மூடப்பட்டிருந்ததா என்றால் மூடப்பட்டிருந்தது. பேக்கிற்குள் ஒரு கவர் இருந்தது. அந்த கவர் திறந்திருந்ததா என்றால் அது பிளாஸ்டிக் கவர் அதற்குள்ளே இரண்டு கறுப்பு பிளாஸ்டிக் கவர் இருந்தது அது திறந்திருந்ததா என்றால் இல்லை. அதை நான் பார்த்தேன்.

(3) சம்பவ இடத்தில் இருந்து காவல் நிலையத்திற்கு சுமார் 15-20 நிமிடங்களில் வந்துவிடலாம். நான் தகவல் கொடுத்த போது நேரம் சுமார் 05.00 மணி இருக்கும். ரோந்து பணியில் இருந்தவர்களுக்கு தகவல் கொடுத்தேன். நான் சொன்னது போல் எந்த பொருளையும் எதிரி கொண்டு வரவில்லை என்றும், அவை காவல் நிலையத்தில் இருந்தது என்றால் சரியல்ல. சோதனைக்கு மாதிரி எடுத்த போது நான் அங்கு இல்லை. காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட பொய்யான வழக்கில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நேரு காந்தி சம்பவ இடத்தில் நடந்ததை பற்றி காவல் நிலையம் வந்து சொல்லித்தான் தெரியும். நான் சொன்னபடி எந்த சம்பவமும்

நடைபெறவில்லை என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.10 18:02:41 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்